பக்கங்கள்:12

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 06 வியாழக்கிழமை 22.08.2024 கதிர் 288

## நியாயம் இன்றி செயற்படுகிறது

### தேர்தல்கள் ஆணைக்குழு மீது -குற்றச்சாட்டு

தேர்தல்கள் ஆணைக் குழு நியாயமான முறையில் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. வரும் ஜனாதிபதித் தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற போதும் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களுக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்கப்படுகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானது என்றாலும் நீதியானதாக இடம் ☞2

## வடக்கில் வறட்சியினால் 25 ஆயிரம் பேர் பாதிப்பு

வடக்கில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக 8,357 குடும்பங்களைச் சேர்ந்த 25,638 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதி ஊடகப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

வறண்ட காலநிலை காரணமாக கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

வறட்சியால் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆயிரத்து 234 குடும்பங்களைச் சேர்நத 4 ஆயிரத்து 204 பேருக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

## இது ரகசியம் அல்ல!

ஐக்கியமக்கள்சக்தியின்ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் தேர்தல் அறிக்கை அனேகமாக இந்த வாரம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நேற்று அது வரலாம் என்றிருந்தது. ஆனால் நடக்கவில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என்று சஜித் வாக்குறுதியளித்திருக்கும் நிலையில் அதனை புதிய நாடாளுமன்றம் உருவாகி ஒரு வருடத்திற்குள் ஒழித்துவிட வேண்டும் என்று சமூகத்தன் முக்கிய பிரமுகர்கள் 83 பேர் அடங்கிய குழு ஒன்று வலியுறுத்தியுள்ளது.

சஜித்தின் தேர்தல் அறிக்கையில் இது இடம்பெறும் என்று தெரிகின்றது. இந்த விவகாரத்தை சஜித்தே தான் கையில் எடுத்தார் என்றும் தான் வெற்றி பெற்றால் ஒரு வருடத்திற்குள் நாடாளுமன்றத்திற்கு ஊடாக இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்துவிடும் முடிவோடுதான் இருக்கின்றார் என்றும் சொல்லப்படுகின்றது.

நாட்டுமக்களுக்கு அது தொடர்பான அவரது வாக்குறுதி தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருக்கும் என்றும் சொல்லப்படுகிறது. அப்படி இடம்பெற்றால் அது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ☞2

## இன்று தீர்ப்பு

2023 மார்ச் மாதம் 9 நடத்தப்படவேண்டிய உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் தவறியதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்பட இருக்கின்றது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் விஜித் மலலகொட, முர்து பெர்னாண்டோ, காமினி அமரசேகர, யஸந்த கோத்தாகொட ஆகியோரைக் கொண்ட உயர் நீதிமன்றத்தில் 5 நீதியரசர்கள் ஆயத்தின் முன்பாக இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது. விசாரணைகள், விளக்கங்கள் முடிவடைந்த நிலையில் அதன் தீர்ப்பு இன்று வரவுள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான நாள் தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்ட பின்னர், அதனை நடத்துவதற்குப் போதிய நிதி இல்லை என்று தெரிவிக்கப்பட்டு நிறுத்தப்பட்டது. முன்னதாக தேர்தலை ☞2

## எதிர்க் கட்சிக்கு மாறினார் கொடித்துவக்கு எம்.பி.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (SLPP) மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருணாதாச கொடித்துவக்கு நேற்று நாடாளுமன்றத்தில் எதிர்கட்சி இடம் மாறினார்.

இந்த தீர்மானத்தை அறிவிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் நேற்று விசேட அறிக்கையொன்றை முன் வைத்தார், நாட்டின் எதிர்காலம் மற்றும் பொருளாதாரத்தின் நன்மை கருதி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கின்றார் என்று அறிவித்தார்.

தனது உரையை முடித்த பின்னர், கொடித்துவக்கு நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்புப் பக்கம் இருந்து எழுந்து சென்று எதிர்க்கட்சி ☞2

## படையினருக்கு அஞ்சலி செலுத்தி பரப்புரையை தொடங்கிய நாமல்

### வடக்கு கிழக்கு இணைப்பு இல்லை ; காணி பொலிஸ் அதிகாரங்களும் கிடையாது என்பதில் திட்டவட்டம்

போரில் உயிரிழந்த படையினருக்கு அஞ்சலி செலுத்தி தனது முதலாவது பரப்புரையை அனுராதபுரத்தில் நேற்றுத் தொடங்கினார் பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச. கூட்டத்தில் உரையாற்றிய அவர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மீளிணைத்து காணி, பொலிஸ அதிகாரங்களை ஒருபோதும் வழங்கமாட்டேன் என்றும் தெரிவித்தார்.

'தேர்தல் காலத்தில் வடக்கில் உள்ளவர்களை ஏமாற்ற வேண்டிய தேவை எனக்குக் கிடையாது. முடிந்ததை முடியும் என்பேன், முடியாததை முடியாது என்பேன். தமிழர்களின் கலாசாரத்தைப் பாதுகாப்பேன். மொழி உரிமையையும் வழங்குவேன். ஆனால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மீளிணைத்துக் காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தை ஒருபோதும் வழங்கமாட்டேன்'' - ☞8

## எந்த வேட்பாளருக்குமே திருச்சபை ஆதரவில்லை

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் தாம் ஆதரவளிக்கப்போவதில்லை என்று இலங்கை கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித்தைச் சந்தித்துப் பேசியுள்ளனர். தங்கள் அரசியல் திட்டங்கள் குறித்துப் பகிர்ந்து கொண்டுள்ளனர். இருப்பினும் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவை வெளியிடப்போவதில்லை என கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் சிறில் காமினி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

மக்களே தங்களிற்கு யார் வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும். நாங்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் நாட்டில் கத்தோலிக்க மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த பேச்சு நடத்துகின்றோம் மாத்திரம் ஈடுபடுகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி ☞8

## ஐக்கிய மக்கள் சக்தியின் தலதா எம்.பி. பதவி துறப்பு

### ஐக்கிய தேசியக் கட்சியின் பிளவால் வருத்தமாம்

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தனது நாடாளுமன்றப் பதவியைத் துறந்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக விசேட அறிக்கை ஒன்றை விடுத்த பின்னர் அவர் பதவி விலகினார்.

மறைந்த ஐக்கிய தேசியக் கட்சியின் (UNP) அரசியல்வாதியான காமினி அத்துகோரலவின் சகோதரியான தலதா அத்துகோரள, 2004ஆம் ஆண்டு முதன்முதலில் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தார். இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து 2010, 2015 மற்றும் 2020 ☞2

## ரூ. 7.9 பில்லியன் வரி அறவிடப்படவில்லை

### நாடாளுமன்றத்தில் சம்பிக்க சுட்டிக்காட்டு

மதுபான உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து 7.9 பில்லியன் ரூபாய் வரி இன்னமும் அறவிடப்படவில்லை என்று நாடாளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது வர வசூலிப்பு வழிவகைகள் பற்றிய நாடாளுமன்றக் குழுவின் ☞2

### எலும்புத்துண்டுக்கு வாலாட்டுபவர் அரியநேந்திரன்

## பொதுவேட்பாளர் மாயைக்குள் சிக்கிக்கொள்ளவே வேண்டாம்

### தேர்தலைப் புறக்கணியுங்கள்; கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து

பொது வேட்பாளர் என்கிற மாயைக்குள் சிக்கிக்கொள்ள வேண்டாம். அரியநேந்திரன் இலங்கையின் ஒற்றையாட்சியை முழுமையாக ஏற்றுக்கொண்ட ஒருவர். அவருக்கு கிடைக்கும் எலும்பு துண்டுக்கு வாலாட்டி கொண்டு வந்திருக்கிறார். இது தேசிய தலைவருக்கும் 50 ஆயிரம் மாவீரர்களுக்கும் 3 லட்சம் தமிழ் மக்களுக்கும் செய்கின்ற துரோகம்.

இவ்வாறு பொதுவேட்பாளரைக் கடுமையாகச் சாடியிருக்கின்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன். ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரி மட்டகளப்பில் துண்டறிக்கைகளை வழங்கும் நிகழ்வில் பங்கெடுத்துக் கொண்ட அவர் அங்கு கருத்துத் தெரிவித்தபோது இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரும் ஜனாதிபதித் தேர்தலிலே பொது வேட்பாளர் என்கின்ற மாயைக்குள் சிக்கிக் கொள்ள வேண்டாம். அரியநேத்திரன் இலங்கையினுடைய ☞2

## ஆளும் தரப்புக்குத் தாவிய இருவருக்கு அமைச்சுப் பதவி

எதிர்க் கட்சித் தரப்பிலிருந்து ஆளும் தரப்புக்குத் தாவிய அலி சாகிர் மௌலானா மற்றும் வடிவேல் சுரேஸ் ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தொழில் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அபிவிருத்தி திட்டங்கள் அமைச்சரவை அல்லாத அமைச்சராக பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர்கள் இருவரும் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

வடிவேல் ☞2

## இனி இது .....

நெருக்கடியை ஏற்படுத்தும். இதற்கு முன்னர் அவர்தான் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டும் என்பதில்தீவிரமாகஇருந்தார். என்று அந்தப் பதவியில் அமர்ந்தாரோ அதன் பின்னர் அது பற்றி அவர் பேசுவதேயில்லை. இப்போது அது முக்கியவிடயமேஅல்லஎன்றுவேறு கருத்துச் சொல்லி வருகிறார்.

..................

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தைப் போட்டுத் தாக்குவது என்றுமுன்னணியின்நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் முடிவு செய்துவிட்டார் போலுள்ளது. அரிய நேந்திரனைத்துரோகிஎன்றும்பொது வேட்பாளரை முன்வைத்துள்ள பொதுக் கட்டமைப்பினர் சலுகைகளுக்காகவே இதனைச் செய்கிறார்கள் என்றும் அவர் சாடியிருக்கிறார்.

துரோகி என்பது கொஞ்சக் காலத்திற்கு முன்பாக முன்னணிக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட வாள்தான். இப்போது அவர்கள் அதனைத் திருப்பப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். அதுபோன்றே இன்று பொதுக் கட்டமைப்பிற்குள்இருக்கும்அரசியல் பத்திஎழுத்தாளர்களில்பலரும்கடந்த பொதுத் தேர்தலில் முன்னணியை ஆதரித்தவர்கள்தான். கடந்த ஒரு தசாப்தமாகவே சம்பந்தரையும் சுமந்திரனையும் எதிர்க்க அவர்கள் முன்னணிதான்தமிழ்மக்களுக்காக நிற்கும் கட்சி என்று சொல்லி வந்தார்கள்.

இன்றுஅதைக்கைவிட்டுபழைய கூட்டமைப்பை ஒற்றுமைப்படுத்தச் சென்றுவிட்ட கோபத்தில்தானோ என்னவோகஜேந்திரன்அவர்களை வாங்கு வாங்கு என்று வாங்கித் தள்ளுகிறார். எது எப்படியிருந்தாலும் ஒன்று மட்டும் நிச்சயம். தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான, ஒற்றுமைப் படுத்துவதற்கான பொதுக் கட்டமைப்பின் முயற்சி மீண்டும் எதிரி, துரோகி என்கிற வட்டத்திற்குள் மீண்டும் வந்து நிற்கின்றது. குண்டுச் சட்டியைவிட்டு இந்தக் குதிரைகள்வெளியேஓடுவதுநடக்கிற காரியமாகத் தெரியவில்லை.

இதற்கிடையில் பொதுக் கட்டமைப்பினுள் அதிருப் திகளும் குழப்பங்களும் அதிகரித்துக் கொண்டேசெல்கின்றன. -முல்லைத் தீவில் இவர்களின் முதலாவது பரப்புரைக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தை ஒழுங்கமைத் தமைக்கான செலவு முழுவதையும் தனதுதலையிலேயேகட்டிவிட்டார்கள் என்று அதனை ஒழுங்கு செய்தவர் கதறி வருகின்றாராம். ஒரு சதம் காசுகூடத் தராமல் பொதுக் கட்டமைப்பினர் நழுவிவிட்டனர் என்பதே அவரது சோகம். இந்த முயற்சிக்கு எதிர்பார்த்த நிதி வந்து சேராததே இதற்குக்காரணம்என்று சொல்லப்படுகின்றது.

அவர்களை நம்ப வைத்துக் களத்தில்இறக்கிவிட்டஅமைப்புக்கள் தயவுசெய்து உடனடியாக 25 கூட்டங்களுக்குரிய பணத்தையாவதுஅனுப்பிவைத்தால்நன்றாயிருக்கும்.

இதைவிட, நேற்று யாழ்ப்பாணத்தில் இலங்கைக்கான சுவிற்சர்லாந்துத் தூதுவரை பொதுக் கட்டமைப்பில் இருக்கும் பொதுச் சபைக்காரர்கள் இருவரும் 3 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசினர். இந்தக் கூட்டத்திற்குத்தங்களுக்குஅழைப்பு அனுப்பப்படவில்லை என்று ரெலோ மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன கவலை கொண்டுள்ளனவாம். தூதுவர்கள் யாழ்ப்பாணம் வந்தால் இப்படிப் பலரையும் சந்திப்பதும் கருத்துக் கேட்பதும் நாடி பிடித்துப் பார்ப்பதும் வழக்கமாக நடப்பதுதான். அப்படிப்பட்ட தனிப்பட்ட அழைப்புத்தான் இது என்று பங்கேற்றவர்கள் விளக்கம் சொல்லக்கூடும்.



பொதுக் கட்டமைப்பு என்று சேர்ந்தும் அரசியல் கட்சிகள் தனியாகவும் பின்னர் பொதுச் சபை என்று தனியாகவும் என்று சாம்பாறாக குழப்பியடிக்கப்படும் இந்தக் கட்டமைப்பைக் கொண்டு இன்னும் ஒன்றரை மாதத்திற்கு எப்படி ஒப்பேற்றப்போகிறார்கள் என்பதுதான் கேள்வி. ஏதோ பார்த்துப் பண்ணுங்க!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நியாயம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுகிறதா என்ற கேள்விகள் எழுகின்றது. தேர்தல்கள் ஆணைக் குழுவே முதலில் அநீதியை இழைக்கின்றது. சில வேட்பாளர்கள் அவர்களின் உதவியாளர்களை அழைத்துவர தனியான இடம் ஒதுக்கியுள்ளது. 39 வேட்பாளர்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்கையில்4வேட்பாளர்களுக்காக மட்டும் தனி இடம் ஒதுக்குவது அவர்களுக்கான ஊக்குவிப்பாகவே அமைகின்றது. இது தேர்தல்கள் சட்டத்துக்கு சரியானதா?

உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளர் ஒருவருக்காக 20 ரூபாவே செலவிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரால் 109 ரூபா செலவிட முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அப்படியென்றால் ஒரு வேட்பாளர் 180கோடிவரைசெலவழிக்கமுடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது சிறிய தொகையல்ல. தேர்தல்கள் செலவினங்களைஒழுங்குப்படுத்தும் சட்டம் முறையற்ற வகையில் பயன் படுத்தப்படுகிறது.

அதேபோன்றுசிலஊடகங்களும் ஒவ்வொருவேட்பாளர்களுக்காகவும் செயற்படுகின்றது. 39 பேருக்கும் சம உரிமையை வழங்க வேண்டும். ஆனால் தற்போது ஒருசில ஊடகங்கள் மிகவும் கீழ்த்தரமானமுறையில்தங்களுக்கு இணக்கமான வேட்பாளரை மாத்திரம் ஊக்குவிக்கின்றன.

நியாயமானதும், சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்கும் பெப்ரல் நிறுவனமும் தற்போது அநீதியான முறையில் நடந்து கொள்கிறது. பொருளாதார கொள்கைகள் தொடர்பான விவாதத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 6 வேட்பாளர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பெப்ரல் அமைப்பு ஒரு தரப்பிடமிருந்துகப்பம்பெற்றுவிட்டதா என்று எண்ண தோன்றுகிறது.

இது நீதியான தேர்தலா? செலவு கட்டுப்பாடு தொடர்பான சட்டத்தின் எதிர்பார்ப்பு என்ன? கறுப்புப் பணம், போதைப்பொருள் பணம், பாதாள குழுக்களின் பணம், சூதாட்ட பணம் என்பன இந்தத் தேர்தலில் புழக்கத்தில் உள்ளது. இப்படி போனால் எதிர்காலத்தில் நாடு அழிவையே எதிர்நோக்கும்.

நாட்டின் கடன் தொகை அதிகரித்துள்ளதுடன் டொலர் விலையும் அதிகரித்துள்ளது. 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும்விசேடஅவதானம் செலுத்த வேண்டும். நாட்டை சௌபாக்கியமான யுகத்தை நோக்கி கொண்டு செல்ல வேண்டும். எமக்கென பொறுப்புகள் உள்ளன. நீதியான தேர்தலை நடத்தி, ஊழல் அற்றநாட்டைஉருவாக்கவேண்டும் என்றார்.

## எதிர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் தனது இருக்கையில் அமர்ந்தார்.

2020 பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கீழ்மாத்தறை மாவட்டத்தில் இருந்து கொடித்துவக்கு 114,319 வாக்குகளைப்பெற்றுநாடாளுமன்றத்திற்கு வந்திருந்தார்.

## ஆளும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுரேஷ் 2020 பொதுத் தேர்தலில் பதுளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஐக்கிய மக்கள் சிக்தியில் இருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டார்.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் போது அரசுக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்ததை அடுத்து, கடந்த ஆண்டு நவம்பரில் அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

டிசெம்பர் 6, 2023 அன்று, மலையகத் தமிழர்களை இலங்கைச் சமூகத்துடன் முழுமையாக ஒருங்கிணைப்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராக சுரேஷ் நியமிக்கப்பட்டார்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர்நசீர்அஹமட்பதவிநீக்கம் செய்யப்பட்டதையடுத்து வெற்றிடமான நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் (SLMC) சார்பில் அலி சாஹிர் மௌலானா கடந்தஒக்டோபர்17ஆம்திகதிநாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

## ஐக்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆம் ஆண்டுகளில் நடந்த பொதுத் தேர்தல்களில் அவர் மீண்டும், மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2020 பொதுத் தேர்தலில், அவர் இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து 45,105 வாக்குகளைப் பெற்று ஐக்கிய மக்கள் சக்தியின் (SJB) உறுப்பினராக நாடாளுமன்றத்தில் தனது இடத்தைப் பெற்றார்.

நாடாளுமன்றத்தில்அவர்நேற்று விடுத்த விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

இது எனக்கு மிகவும் உணர்ச்சிகரமான தருணம். ஒரு பக்கம் எமது 'தாய் கட்சி'யான-ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. அக்கட்சியின் தலைவர் மற்றும் முன்னாள் துணைத் தலைவர் இருவரும் அரசியல் எதிரிகளாகிவிட்டனர். இருவரும் அதிபர் பதவிக்குப் போட்டியிடுகின்றனர். அனைவரும் ஒன்றிணைய முயற்சிக்கும் இவ்வேளையில், எமது முகாமை பிரித்து தனித்து போட்டியிடும் முடிவை என்னால் முழுமனதுடன் ஏற்றுக்கொள்ள முடியாது.

இரு தலைவர்களும் பிரிந்து போட்டியிடும் முடிவு நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காமல் எடுக்கப்பட்ட சுயநல அரசியல் முடிவு என்று நான் நம்புகிறேன். எதிர்காலத்தில் வரலாறு அதை நிரூபிக்கும். இதைப் பற்றி நான் தொடர்ந்து மௌனம் சாதித்தால், அந்தப் பாவத்திற்கு மறைமுகமாகப் பங்களிப்பவனாகவும்ஆகிவிடுவேன்.

எனதுஅரசியல்பயணத்தைநான் ஒருபோதும்நிறுத்தமாட்டேன், அதை இந்த நேரத்தில் பெருமையுடனும் தைரியத்துடனும் கூறுவேன். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைவிட்டு விலகுவதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. இன்று, நான் அந்த முக்கியமான தருணத்தை எதிர்கொள்கிறேன்,

நான் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக வெற்றி பெற்றாலும் கட்சி பிளவுபடுவதை நான் விரும்பவில்லை, எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காமல் நாங்கள் எடுத்த முடிவு சரியான முடிவா என்று நான் தொடர்ந்து யோசித்து வருகிறேன்.

எங்கள் பெரிய கட்சியின் பிளவுக்கு நானும் பங்களித்தேனா என்ற எண்ணம் நான் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் பதவியின் மகிழ்ச்சியைவிட அதிகமாக இருப்பதை வருத்தத்தோடு உணர்கிறேன் - என்றார்.

## எந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர் சஜித்பிரேமதாச ஜேவிபியின்ஜனாதிபதிவேட்பாளர் அனுரகுமார உட்பட பல ஜனாதிபதி வேட்பாளர்கள் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தை சந்தித்து பேச்சு நடத்தனர்.

எந்த வேட்பாளருக்கும் ஆதரவளிக்காத போதிலும் கத்தோலிக்க மக்கள் தொடர்பான விவகாரங்கள் குறித்தும், 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு நீதியை நிலைநாட்டுவதுகுறித்தும்ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வோம் எனசிறில்காமினிபெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

## இன்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அப்படியிருந்தும் நிதி அமைச்சிலிருந்து நிதி விடுவிக்கப்படாததன் காரணத்தால்வாக்குச்சீட்டுஉள்ளிட்ட தேவையான பொருட்களை

## பொதுவேட்பாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றை ஆட்சியை முற்று முழுதாக ஏற்றுக்கொண்ட ஒருவர். இதை பௌத்த நாடாக ஏற்றுக் கொண்ட ஒருவர் தமிழரசு கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினராக 2010 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையில் இருந்தபோது சிங்கள பௌத்த நாடு என்பதனை ஏற்றுக்கொண்டு 13ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வாக ஏற்றுக் கொள்வதற்கு அவருடைய தலைவர் சம்பந்தரும் சுமந்திரனும் எடுத்த அனைத்து முயற்சிகளிலும் அவர் நூற்றுக்குநூறுவீதம்உடந்தையாக இருந்து செய்யப்பட்டவர்.

2015 ஆம் ஆண்டிற்கு பிற்பாடு தமிழ் அரசு கட்சியின் உடைய மத்திய குழு உறுப்பினராக இருந்து, தமிழ் அரசு கட்சி பழுத்த அரச மரம் என்பதனைஏற்றுக்கொண்டுவடக்கு கிழக்கு இணைப்பை கைவிட்டு சமஷ்டியைக் கைவிட்டு ஏக்கிய ராஜ்யத்தை ஏற்றுக் கொண்டு அரசியல் யாப்பு வரைபை மைத்திரி ரணில் ஆட்சி காலத்தில் தயாரித்த போது சுமந்திரனுடைய அனைத்து முயற்சிகளுக்கும் தமிழ் அரசு கட்சியினுடைய மத்திய உறுப்பினராக பூரணமாக துணை நின்றவர்.

அதேபோன்று விக்னேஸ்வரன், சித்தார்த்தன், செல்வமடைக் கலநாதன் போன்றவர்கள் 13 ஆம் திருத்தச் சட்டத்தை தீர்வாக 15 ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்றவர்கள். எழுத்து மூலமாககூட இந்திய பிரதமரிடம் 13ஆவது திருத்தச்சட்டத்தைதீர்வாக வலியுறுத்தி இருப்பவர்கள்.

கடந்தஜூன்மாதம்20ஆம்திகதி இந்தியாவின் அயலுறவுத்துறை அமைச்சர்ஜெய்சங்கர்கொழும்புக்கு வந்து கட்சிகளை சந்தித்தபோது நாங்கள்எட்டுபேர்சந்தித்திருந்தோம். அதில் நான் தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பிலும் விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் கூட்டணி சார்பிலும் டெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன் புளொட் சார்பில் சித்தார்த்தன் தமிழ் அரசுக் கட்சியை சார்பில் மாவை சேனாதிராஜா அந்தக் கட்சியின் சுமந்திரன் மற்றும் ஸ்ரீதரன்ஆகியோரும்வந்திருந்தனர்

தொடர்ச்சி 8ம் பக்கம்...




காலைக்கதிர்
Kalaikkathir

# சரணடைந்தவர்கள், காணாமலாக்கப்பட்டவர்கள் கொன்று மண்ணுக்குள் புதைக்கப்பட்டார்களா?

## கஜேந்திரன் எம்.பி. கேள்வி




சரணடைந்தவர்கள் அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொன்று புதைக்கப்பட்டிருக்கிறார்களா? என கஜேந்திரன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தினரால் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி முன்பாக 'கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்தை மூடி மறைக்க வேண்டாம், எமக்கு உண்மையும் நீதியும் வேண்டும்' என கூறி போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே கஜேந்திரன் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

கொக்குத்தொடுவாயில் கடந்த வருடம் ஜூலை மாதம் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து இந்த இடம் பொலிஸாருடைய நீதிமன்றத்தினுடைய, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு அகழ்வுப் பணிகள் இடம்பெற்று 52 உடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. அனைத்துமே தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களினுடையது என்பதுதான் எங்களுடைய நம்பிக்கை.

அந்த அகழ்வு பணியின்போது, பல தகட்டு இலக்கங்கள், விடுதலைப்புலிகளுடைய அடையாளத்தை உறுதிப்படுத்துகின்ற தகட்டு இலக்கங்கள் மற்றும் அவர்களுடைய உடல்களில் துப்பாக்கி சன்னங்கள் பாய்ந்ததற்கான தடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

அவர்களுடைய கைகள் கட்டப்பட்ட நிலையில் இருந்ததாகவும் இங்கே அம்மாக்கள் கூறியிருக்கின்றார்கள். முன்பக்கமாகவும், பின்பக்கமாகவும் சப்பாத்து நூல்கள் மூலமாக கட்டப்பட்டிருக்கின்றன. 52 உடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற நிலையிலே எங்களைப் பொறுத்தவரையிலே இங்கே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் அம்மாக்கள் கூறியது போன்று ஒன்றில் முள்ளிவாய்க்கால் முடிவிலே வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் சரணடைந்த முன்னாள் போராளிகள், அவர்களோடு சென்ற மனைவிகள், பிள்ளைகள் அதனை விட, இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள், ஓமந்தை பகுதியிலும் மற்றும் வவுனியா தடுப்பு முகாமிலும் இராணுவத்தினரால் தேடி, தேடி கைது செய்யப்பட்டு கடத்தப்பட்டு கொண்டு செல்லப்பட்டவர்கள் இவ்வாறு பல்லாயிரக்கணக்கானவர்கள், காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு சரணடைந்தவர்கள் அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொன்று புதைக்கப்பட்டிருக் கிறார்களா? என்கின்ற ஒரு சந்தேகம் இருக்கிறது. ஏனென்றால், ராஜ்சோமதேவ அவர்கள் கூற முற்படுவது போன்று இது 1994, 1995ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய சடலங்களாக இருக்கலாம் என்றால் அவர்கள் கூற முற்படுவது போன்று மணலாற்றிலே ஒரு யுத்தம் நடைபெற்றிருந்தது.

அதில் கணிசமான போராளிகள் வீரச்சாவடைந்திருந்தார்கள். அது அவர்களுடைய உடல்கள் தான் என கூறுவதாகவே அவர்களுடைய கதை இடம்பெற்றிருந்தது. அவ்வாறாயின் கைகள் கட்டப்பட்டதற்கான வாய்ப்புகள் இல்லை.

இறுதிப் போரிலே சரணடைந்தவர்கள்தான் சித்திரவதைக்கு பிற்பாடு கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது எங்களுடைய சந்தேகம்.

இங்கே தாய்மார் குறிப்பிட்டது போன்று அந்த சீருடைகள் பழுதடைந்து உக்கி, இறந்து போகாமல் இருந்திருக்கிறது என்று சொன்னால் அது மிக அண்மையிலேதான் புதைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த வகையிலே இது 2009ஆம் ஆண்டு சரணடைந்தவர்கள் அல்லது கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை, கொன்று புதைத்திருக்கிறார்கள் என்பது எங்களுடைய சந்தேகம்.

இந்த பிரதேசம் 1984ஆம் ஆண்டு விமானங்கள் மூலம் துண்டுப்பிரசுரம் போடப்பட்டும், நேரடியாக ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டும் பலவந்தமாக மக்கள் வெளியேற்றப்பட்டிருந்தார்கள். வெளியேற்றப்பட்ட பிறகு இந்த பிரதேசம் முழுமையாக இராணுவத்தினுடைய கட்டுப்பாட்டிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. யுத்தம் முடிகின்ற வரையில் இந்த பகுதியிலே மிகப்பெரிய இராணுவதளம் இருந்தது. முழுமையாக இராணுவ கட்டுப்பாட்டிலே இருந்திருந்தது.

ஆகவே இங்கே விடுதலைப்புலிகளுடைய கட்டுப்பாட்டில் இது 1984ஆம் ஆண்டுக்கு பின்னர் ஒரு நாள் கூட இருந்ததில்லை. அவ்வாறு இருக்கிறபோது இராணுவ கட்டுப்பாட்டிலே இராணுவ முகாமுக்கு அருகே அதனுடைய முன்னரங்கத்திலே இந்த புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்றால் இதற்கு நிச்சயமாக இலங்கை இராணுவத்தினர்தான் முழுமையாக பொறுப்புக்கூற வேண்டும்.

இவ்வாறான நிலைமையிலே அரசியல் மயப்படுத்தப்பட்டு இனவாதப்படுத்தப்பட்டு, ஊழல் நிறைந்ததாக இருக்கிற இலங்கை காவல்துறை, இலங்கை நீதித்துறை மற்றும் ஏனைய திணைக்களங்கள் சம்பந்தப்பட்ட அனைத்து திணைக்களங்களுமே அரசியல் மயப்படுத்தப்பட்டு இனவாதம் மயப்படுத்தப்பட்டு, ஊழல் மயப்படுத்தப்பட்டு, தமிழர்களுக்கு எதிரானதாக இருக்கின்ற நிலையிலேயே தமிழர்கள் ஒரு சில திணைக்களங்களிலே, பொறுப்பான பதவிகளில் இருந்தாலும் அவர்களால் சுதந்திரமாக செயற்பட முடியாது.

இந்த இடத்திலே கிராமசேவையாளர் கூட கொடுத்த அறிக்கையிலே பல விடயங்கள் தெரியாது என்றுதான் கூறப்பட்டிருப்பதாக அறியக்கூடியதாக இருக்கிறது. அப்படி என்றால் இங்கே ஒரு சுதந்திரமான, சுயாதீனமான செயற்பாட்டை நாங்கள் எதிர்பார்க்க முடியாது. ஆகவே, நாங்கள் உள்ளக பொறிமுறை விசாரணையை முற்றுமுழுதாக நிராகரிக்கிறோம். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக அந்த மக்களுடைய கோரிக்கையாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிவது தொடர்பாக ஒரு முழுமையான சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான மரபணு பரிசோதனை கூட சர்வதேச சமூகத்தால் பொறுப்பெடுக்கப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும். உள்ளக பொறிமுறைகளில் நம்பிக்கை இல்லை. உள்ளக நீதி கட்டமைப்புகள் மீதும் நம்பிக்கை இல்லை.

இங்கே பிரதேசங்களில் இருக்கின்ற நீதிபதிகள் தமிழர்களாக இருந்தாலும் கூட இலங்கை அரச கட்டமைப்பு என்பது இனவாத மயப்படுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே இலங்கை அரச கட்டமைப்புக்குள் உள்ளக பொறிமுறைக்குள் முன்வைக்கப்படுகின்ற எந்தவொரு நீதி பொறிமுறையையும் நாங்கள், ஏற்றுக்கொள்வதற்கோ நம்புவதற்கோ தயாராக இல்லை.

ஒரு முழுமையான சர்வதேச, பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நாங்கள் மீள மீள வலியுறுத்துகிறோம். இங்கே அம்மா ஒருவர் குறிப்பிட்டது போன்று இந்த அகழ்வுப் பணிகள் வெளிப்படைதன்மையோடு நடத்தப்படவில்லை.

ஊடகவியலாளர்களுக்கு இந்த அகழ்வுப்பணிகள் நடைபெறும்போது தொடர்பாக அவர்கள் அவதானிக்கக்கூடியதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. அடாவடிகள் கையாளப்பட்டிருக்கிறது. அதில் ஒரு சில தமிழர்களை வைத்துக்கொண்டே ஊடகவியலாளர்கள் அவமதிக்கப்பட்டிருக்கிறார்கள். உறுக்கப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறான செயற்பாடு நடைபெற்றிருக்கிறது.

இவ்வாறான செயற்பாட்டினை நாங்கள் ஒரே கண்துடைப்பாகவே பார்க்கின்றோம். உள்ளக விசாரணை செயற்பாட்டை முற்றாக நிராகரித்து சர்வதேச விசாரணையை நாங்கள் வலியுறுத்துகிறோம் என மேலும் தெரிவித்தார். (05)

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை 35 ஆயிரத்தையும் கடந்தது




*நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.*


*அதன்படி, இம்மாதம் 20 ஆம் திகதி வரை 35ஆயிரத்து 375 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அவர்களில் அதிகளவாக 8 ஆயிரத்து 599 நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் பதிவாகியுள்ளனர்.*

*மேல் மாகாணத்தில் இதுவரை 14 ஆயிரத்து 448 பேர் பதிவாகியுள்ளதோடு, மாகாண ரீதியாக அதிகளவாக இம்மாதத்தில் 2,630 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.*

*நாட்டில் பல பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழையால் டெங்கு நோயைத் தடுக்க சுற்றுப்புறங்களில் தூய்மையைப் பேணுமாறும், நுளம்புகள் பெருகும் இடங்களை அகற்றுமாறும் சுகாதார அதிகாரிகள் மக்களை வலியுறுத்தியுள்ளனர்.(05)*

# வத்தளையில் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு மலைப்பாம்புகளுடன் மூவர் கைது





வத்தளை பிரதேசத்தில் உள்ள செல்லப் பிராணிகளை விற்பனை செய்யும் நிலையமொன்றில் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட நான்கு வெளிநாட்டு மலைப்பாம்புகளுடன் மூன்று சந்தேக நபர்கள் நேற்று (புதன்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்; என வத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

செல்லப் பிராணிகளை விற்பனை செய்யும் நிலையத்தின் உரிமையாளரும் இரண்டு பணியாளர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்த இரண்டு ஆண் மலைப் பாம்புகளும் இரண்டு பெண் மலைப்பாம்புகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பல இலட்சம் ரூபா பெறுமதியான இந்த மலைப்பாம்புகள் பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டு வெளிநாட்டிலிருந்து விமானம் மூலம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதனையடுத்து, இந்த மலைப்பாம்புகள் அனைத்தும் தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை வத்தளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வத்தளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஆவன செய்வாரா ஆளுநர்?

வடக்கில் இன்று பெரும் சர்ச்சைக்குரிய துறையாகி இருக்கிறது மருத்துவத்துறை. சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மருத்துவர் இராமாதனுக்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் போராட்டம் நடத்தியதிலிருந்து இந்த விவகாரம் பூதாகாரமானது. மருத்துவ 'மாபியா', மருத்துவப் புறக்கணிப்பால் ஏற்படும் இறப்புக்கள் என்கிற சொற்பதங்கள் இதன் பின்னர் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மருத்துவத் தவறுகள் மற்றும் மருத்துவக் கண்காணிப்பில் காட்டப்படும் அலட்சியம் என்பவற்றால் மன்னார் பொது வைத்தியசாலை உட்படப் பல வைத்தியசாகள் இப்போது சர்ச்சைக்குள்ளாகி வருகின்றன. இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகள், அரச மருந்தகங்கள் ஆகியவற்றில் முன்னெடுக்கப்படும் சேவைகள் தொடர்பான தகவல் அடங்கிய பாதாதைகள் காட்சிப்படுத்தப்படவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மாகாண சுகாதார அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நோயாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள், நோயாளர்களும், வைத்தியர்களும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், சேவையை பெற்றுக் கொள்வதில் தாமதம் அல்லது சிக்கல்கள் ஏற்பட்டால் தொடர்புகொள்ள வேண்டிய உயர் அதிகாரிகளின் தொடர்பு இலக்கங்கள் ஆகியன குறித்த பதாதையில் காட்சிப்படுத்தப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் தொலைபேசி இலக்கங்கள் அறிவித்தல் பதாதையில் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும் எனவும், பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் சுகாதார துறை உயர் அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் 'அபயம்' பிரிவின் தொலைபேசி இலக்கமும் அறிவித்தல் பதாதையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவத்துறையினர் மீது மக்களுக்குஏற்பட்டுவரும் மதிப்பிழப்பைத் தடுத்து நிறுத்தி அதனை மீளமைக்க ஆளுநர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் என்று கருதலாம். அந்த முயற்சி பாராட்டுக்குரியது. ஆனால், வெறுமனே விவரங்களைக் காட்சிப்படுத்துவதும் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதும் மட்டும் போதாது. அவை நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

இலங்கையின் சட்ட அமுலாக்கலில் காணப்படும் பெரும் குறைபாடு இதுதான். எப்போதும் சட்டத்தின் ஆட்சி ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அதனால்தான் இங்கு ஊழலும், லஞ்சமும், முறைகேடுகளும் தலைவிரித்தாடுகின்றன. மருத்துவத்துறை சார்ந்த தவறுகள் குறித்து எப்போதுமே பொதுமக்களால் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் அவற்றின் மீது முறையான நடவடிக்கைகள்தான் எடுக்கப்படவில்லை. அல்லது திணைக்கள மட்ட ஒழுக்காற்று நடவடிக்கை என்கிற பெயரில் அவர்களுக்கு அதிகபட்சமாக இடம்மாற்றம் மட்டுமே வழங்கப்படுகின்றது.

ஆளுநர் கவனிக்க வேண்டியது இந்தப் போக்குக்கு முற்றுப்புள்ளி வைப்பதேயாகும். முறைப்பாடுகள் மீது முறையான, சுயாதீனமான, பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறையே இப்போது அவசியம். அதன் மூலமே மருத்துவத்துறைத் தவறுகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவரமுடியும். ஆவன செய்வாரா ஆளுநர்?



# தெற்காசியாவில் ஜனநாயக அழுகல்!

## ஆசிம் அலி

வங்கதேசத்தில் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா வாஜித், ஜனநாயகத்தைத் தொடர்ந்து உயிர்ப்புடன் வைத்திருக்க அவசியமான மூன்று அம்சங்களின் கழுத்தை கடந்த பத்தாண்டுகளில் திட்டமிட்ட முறையில் தொடர்ந்து நெரித்து நாசப்படுத்தினார்.

சட்டப்படியான ஆட்சியை நடத்தும் ஜனநாயக அரசு என்ற அந்தஸ்தை அரசு இழந்ததால், மக்களுடைய எதிர்விளைவாக மூண்ட கோபம் மாணவர்களின் பெருங்கிளர்ச்சியால் பொங்கி - பெரிதாகி ஆட்சியையே இழக்கும் அளவுக்கு வெடித்துவிட்டது. 1. குறிப்பிட்ட கால இடைவெளியில் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் பொதுத் தேர்தல்களை நடத்துவது, 2. பல கட்சி ஆட்சி முறைக்கான சூழலைக் காப்பது, 3. மக்களுடைய அடிப்படை உரிமைகளைக் குலைக்காமல் இருப்பது ஆகியவற்றில் அவர் சர்வாதிகாரத்துடன் நடந்துகொண்டார்.

இதுதான் அவருடைய ஆட்சியிழப்புக்குக் காரணம் என்றால் இந்த எதிர்ப்பு ஏன் அரசியல் கட்சிகளிடமிருந்து வராமல், மாணவர்களுடைய போராட்டம் மூலம் வந்தது என்ற கேள்வி எழுகிறது.

### ஆய்வாளர்கள் என்ன சொல்கிறார்கள்?

வங்கதேச அரசியல் குறித்து தொடர்ந்து ஆராய்ந்து எழுதிவரும் டேவிட் ஜேக்மேன் என்ற அரசியல் அறிஞர் 2019இல் ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டார். 'வங்கதேசத்தில் மாணவர்கள் கிளர்ச்சியால் விளையக்கூடிய ஆபத்து: அநீதி, ஊடுருவல் - ஆட்சி மாற்றம்' என்று அந்த ஆய்வறிக்கைக்கு தலைப்பிட்டார். வங்கதேச அரசுக்குப் பிற அரசியல் கட்சிகளாலோ, மக்கள் அமைப்புகளாலோ ஏற்படக்கூடிய ஆபத்து பெரிதாக இருக்காது என்று அதில் குறிப்பிட்டிருந்தார்.

அரசை எதிர்த்துக் குரல் கொடுக்கவோ, வேலைநிறுத்தம் நடத்தவோ வலிமையின்றி எதிர்க்கட்சிகள் மக்களிடையே செல்வாக்கிழந்துவிட்டன என்றும் சுட்டிக்காட்டியிருந்தார். 'மக்கள் அமைப்புகள்' என்று கருதக்கூடிய செய்தித்தாள்கள் (ஊடகங்கள்), தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றை அரசு தன்னுடைய செயல்களில் 'பங்காளி'யாகச் சேர்த்து கொண்டுவிட்டது, எனவே ஆளுங்கட்சியிடம் - குறிப்பாகத் தலைமையிடம் - அதிகாரம் குவிவதைக் குறித்து கவலையுடன் குரல் எழுப்ப அவற்றால் முடியவில்லை. அதனால்தான், எதிர்க்கட்சிகள் ஆற்ற வேண்டிய ஜனநாயகக் கடமையை மாணவர் இயக்கம் பெரிய போராட்டம் மூலம் நடத்தி, நியாயம் கேட்க முடிந்தது.

### இடஒதுக்கீடு விவகாரம்

படிப்புக்கேற்ற வேலைவாய்ப்புகள் கிடைக்கவில்லை, அரசின் வேலைவாய்ப்புகள் வேண்டியவர்களுக்கே செல்கின்றன என்ற எதிர்ப்புணர்வு, இளைஞர்களிடையே கடந்த சில ஆண்டுகளாகவே கனலாக வீசத் தொடங்கியது. வங்கதேசப் போரில் ஈடுபட்டவர்களின் வாரிசுகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் 30% ஒதுக்கலாம் என்ற சமீபத்திய நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு மாணவர்களுடைய போராட்டம் உச்சம் பெற்றது, இது ஒரே நாளில் நிகழ்ந்த நிகழ்வு அல்ல.

கோபம் வெடிக்க அது ஒரு அடையாள நிகழ்வு மட்டுமே. 'படித்த, நகர்ப்புற, நடுத்தர வர்க்க குடும்பத்து இளைஞர்களிடையே படித்த படிப்புக்கு ஏற்ற வேலை கிடைப்பது கடினமாகிவருகிறது என்ற கோபமும் விரக்தியும் படிப்படியாக வளர்ந்துகொண்டேவருகின்றன' என்று 2019லேயே ஜேக்சன் சுட்டிக்காட்டியிருந்தார்.

### வங்கதேச மாணவர் இயக்கம்

வங்கதேசத்தில் மாணவர்கள் பங்கேற்ற அரசியல் இயக்கத்தால்தான் 'கிழக்கு பாகிஸ்தான்' என்று இருந்த நாடு, 'வங்கதேசம்' என்ற நாடாக உருவானது. பாகிஸ்தானின் ஆதிக்கத்தில் இருந்தபோது 'வங்க மொழிதான் ஆட்சிமொழியாக அறிவிக்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கை 1950களில் டாக்கா பல்கலைக்கழக வளாகத்தில் உருவானது. அந்த வங்காள மொழிப் போராட்டமே 'வங்கதேசம்' என்ற தனிநாடு இயக்கமாக மாறியது.

1969இல் பாகிஸ்தான் அரசுக்கு எதிராக உருவான எழுச்சியை, இடதுசாரி மாணவர் அமைப்புகள்தான் முன்னெடுத்தன. மக்களிடையே தங்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதரவு திரட்ட 11 அம்ச கோரிக்கைகளையும் மாணவர்கள் தயாரித்தனர். (வங்கதேசத் தந்தை ஷேக் முஜிபுர் ரெஹ்மான் அந்தக் கோரிக்கைகளின் எண்ணிக்கையைக் குறைத்து, ஆறு அம்சங்களை மட்டும் வலியுறுத்தச் செய்தார். அவை வங்கதேசம் என்ற தனிநாட்டுக்கு உரிமை கோரும் அம்சங்களாகும்).

வங்கதேசம் தனிநாடான பிறகு அரசியல் கட்சிகளின் தலைமையிலான மக்கள் ஆட்சியும், ராணுவம் தலைமையிலான சர்வாதிகார ஆட்சியும் மாறிமாறிவந்தன. 1980களின் பிற்பகுதிகளில் அவாமி லீக், வங்கதேச தேசியக் கட்சி ஆகிய இருபெரும் அரசியல் கட்சிகளின் மாணவர் அமைப்புகளும் இணைந்து மீண்டும் மிகப் பெரிய போராட்டங்களை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஆட்சியில் அமர வழிசெய்தன.

இருபத்தோராவது நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் வங்கதேசத்தில் மட்டுமல்ல முழு தெற்காசிய நாடுகளிலும் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் போக்கு ஏற்பட்டது. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய அனைத்திலும் இரண்டு பெரிய அரசியல் கட்சிகள் அல்லது அவற்றின் தலைமையிலான அரசியல் கூட்டணிகளின் ஆட்சி ஏற்படத் தொடங்கியது. அந்த இரண்டு கட்சிகளுமே மத்தியவாதம் - இடதுசாரி சார்பு அல்லது மத்தியவாதம் - வலதுசாரி சார்பு என்ற கொள்கைகள் அடிப்படையில் இருந்தன. அவை: இந்தியாவில் காங்கிரஸ் - பாஜக, இலங்கையில் இலங்கை சுதந்திர கட்சி - ஐக்கிய தேசிய கட்சி, பாகிஸ்தானில் பாகிஸ்தான் மக்கள் கட்சி - பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்), வங்கதேசத்தில் அவாமி லீக் - வங்கதேச தேசியக் கட்சி.

### தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வாதிகாரம்

அரசு நிர்வாகத்தை அரசியல் கட்சிகள் நடத்தும் நடைமுறை, அதிக பெரும்பான்மையுடன் தேர்தெடுக்கப்பட்ட ஆளுங்கட்சியின் சர்வாதிகார ஆட்சிமுறைக்கு நடைமுறையில் மாறியது. சட்டப்படி உருவாக்கப்பட்ட பல்வேறு அரசு அமைப்புகளின் அதிகாரங்களைச் செல்லாததாக்கி, அனைத்தையும் ஆளுங்கட்சியின் கட்டளைக்கேற்ப செயல்பட வைக்கும் சர்வாதிகாரம் தலைதூக்கியது.

நரேந்திர மோடி தலைமையிலான பாஜக, இலங்கையில் மகிந்த ராஜபட்ச தலைமையிலான

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# தெற்காசியாவில் ஜனநாயக அழுகல்!

4ம் பக்க தொடர்ச்சி...........

கட்சி, வங்கதேசத்தில் ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் கட்சி இதில் அடங்கும். இவை அனைத்துமே அரசின் புலனாய்வுப் பிரிவுகளை அரசியல் உள்நோக்கத்துக்குப் பயன்படுத்தின, மக்களிடையே செல்வாக்குப் பெற்ற ஊடகங்களைத் தங்களுடைய ஊதுகுழல்களாக்கின, ஒட்டுண்ணி முதலாளியத்தையும் குடும்ப நிர்வாக தொழில் குழுமங்களின் ஆதிக்கத்தையும் ஊக்குவித்தன.

பாகிஸ்தான் மட்டும், பலமுறை பயன்படுத்திய ராணுவம் – அரசியல் கட்சிகளின் கலப்பு ஆட்சிமுறைக்கு மீண்டும் மாறிக்கொண்டது.

## தெற்காசிய நெருக்கடி

மக்களுடைய எதிர்ப்பும் கிளர்ச்சியும் இலங்கையிலும் வங்கதேசத்திலும் ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. ஆனால், இரு நாடுகளிலும் முழுமையான ஜனநாயக ஆட்சி ஏற்பட்டுவிடவில்லை. தெற்காசிய நாடுகளில் அமைப்புரீதியாகவே ஜனநாயகம் வலுப்பெற முடியாதபடிக்குக் கட்டமைப்பிலேயே நெருக்கடி நிலவுகிறது. இதை 'தெற்காசிய ஜனநாயக அழுகல் நோய்க்கான அறிகுறி' என்று அழைக்கலாம்.

மக்களிடையே செல்வம் – வருமானத்தில் கடுமையான ஏற்றத்தாழ்வுகள், கட்சி என்பதே ஜனநாயக முறைமையிலிருந்து மாறுவது, அரசின் நிர்வாக ஆற்றலைக் குலைப்பது இதன் அடையாளங்கள். இந்த அம்சங்கள் அனைத்துமே ஒன்றொடொன்று நெருக்கமான தொடர்புகளைக் கொண்டவை. ஜனநாயக குலைவுக்கு தொடர் விளைவாக (டூம் லூப்) இவை செயல்படுகின்றன. இதில் உள்ள அம்சங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முதலாவது, அதிகரித்துக்கொண்டேவரும் ஏற்றத்தாழ்வுகள். இளங்கலை பொருளாதார மாணவர்களுக்கு 'குஸ்நெட் வளைவு' என்ற பாடம் கற்றுத்தரப்படும். அது, தலைகீழாக கவிழ்க்கப்பட்ட 'யு' வடிவ வளைவுக்கோடாகும். ஐரோப்பியப் பொருளாதாரங்களை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் சைமன் குஸ்நெட் (லுற்விஜளமி ளீற்ஷஸள) 1995இல் இந்த வளைவைப் பற்றி விளக்கினார்.

வளர்ந்துகொண்டிருந்த ஐரோப்பிய நாடுகளில் வருவாய் – செல்வம் ஆகியவற்றில் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் ஆரம்பித்து, ஒரு கட்டத்தில் உச்சத்துக்குப் போய் பிறகு கிட்டத்தட்ட சமநிலைக்குத் திரும்பின. அதாவது, ஏற்றத்தாழ்வுகள் குறைந்துவிட்டன. ஆனால், பிறகு பல லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் ஆசிய நாடுகளிலும் 'குஸ்நெட் வளைவு' ஏற்படவில்லை என்பதை டேரன் ஆமோக்லு, ஜேம்ஸ் ராபின்சன் என்ற பொருளாதார அறிஞர்கள் அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் அறிவித்தனர்.

ஐரோப்பாவில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் குறைய எந்த பொருளாதாரக் காரணங்களும் உதவவில்லை, ஜனநாயகத்தை முழுமையாக அமல்படுத்தும் நடைமுறைகளாலேயே சாத்தியமானது என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் ஆளும் வர்க்கம் மீதும் பெரும் பணக்காரர்கள் மீதும் செலுத்திய செல்வாக்குக் காரணமாக ஏற்றத்தாழ்வுகள் குறைந்தன. ஜனநாயகப்படுத்தலால் அரசு அமைப்புகள் வலுப்பெற்று, நாட்டின் செல்வமும் வருமானமும் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டதால் ஏற்றத்தாழ்வுகள் குறைந்தன.

வருவாயையும் செல்வத்தையும் அனைவருக்கும் சமமாகப் பங்கிட வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆளும் வர்க்கமும் மற்றவர்களும் ஏன் காதுகொடுக்க மறுக்கின்றனர் அல்லது அலட்சியம் செய்கின்றனர்? ஏழைகளுக்கும் தேவைப்படுவோருக்கும் அரசு அளிக்கும் உதவிகளைக்கூட 'இலவசங்கள்' என்றே முத்திரை குத்தி கண்டிப்பதும் நடக்கிறது.

அடுத்தது, இரண்டாவது அம்சம்; தெற்காசிய நாடுகளின் ஜனநாயக நோய் அழுகலுக்குக் காரணம் அரசியல் கட்சிகள், அரசியல் கட்சிகளுக்குரிய தன்மையை அவை இழந்து – தனிமனித வழிபாட்டுக்கும் சர்வாதிகாரத்துக்கும் இடம் கொடுப்பதுதான் இதற்குக் காரணம். அரசியல் கட்சிகளின் தன்மை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்றால், மக்களை வாட்டும் பிரச்சினைகள் என்ன, மக்களுடைய தேவைகள் என்ன என்று அறிந்து அவற்றையே கோரிக்கைகளாகவும் திட்டங்களாகவும் தயாரித்து அவற்றை மக்களிடத்தும் அரசாங்கத்திடமும் எடுத்துச் சென்று தேர்தலில் பிரச்சாரம் செய்து, வாக்குகளைப் பெற்ற பிறகு அமல்செய்வதுதான்.

கட்சிக்கு மக்களிடையே செல்வாக்கு இருக்க வேண்டும், நல்ல கொள்கையை வகுக்கும் அமைப்புகள் கட்சியில் இருக்க வேண்டும், மக்களுக்கும் கட்சிக்கும் வலுவான பாலமாகச் செயல்பட தொண்டர்கள் அமைப்பு இருக்க வேண்டும். ஐரோப்பிய அரசியல் கட்சிகள் அப்படிப்பட்டவை. பிரிட்டனில் தொழிலாளர் கட்சியும், ஜெர்மனியில் சமூக ஜனநாயக கட்சியும் ஆண்டுக்கணக்காக மக்களுடன் தொடர்பில் இருப்பவை, அவர்களை ஒன்றுதிரட்டி, கோரிக்கைகளுக்காகப் போராடி, ஆளும் வர்க்கத்தைப் புரட்சிகரமான சமூக – பொருளாதார சீர்திருத்தங்களை அமல்செய்ய வைக்கின்றன, அல்லது தங்களுடைய ஆட்சிக் காலத்தில் அவற்றைச் செய்கின்றன.

## தலைவர்களின் கட்டுப்பாட்டில் கட்சிகள்

தெற்காசியாவில் பெரும்பாலான கட்சிகள் செல்வாக்குமிக்க தலைவர்களின் கட்டுப்பாட்டில் செயல்படுவதற்குப் பதிலாக, அவர்களால் சிறைப்பிடிக்கப்பட்டுவிடுகின்றன. வங்கதேச அரசியல் களம் குறித்த ஆய்வுகள் அவாமி லீக், வங்கதேச தேசியக் கட்சி, ஜாதீய கட்சி (பழமைவாதம்) ஆகியவற்றிடையே கட்சிக் கொள்கைகளிலும் கட்சியை வழிநடத்தும் வர்க்கத்திலும் வித்தியாசம் ஏதுமின்றி இருப்பதைத் தெரிவிக்கின்றன.

கட்சியில் முக்கியக் கொள்கைகளை வகுப்பது, முடிவுகளை எடுப்பது, அவற்றுக்கான குழுக்களைக் கட்சிக்குள் அமைப்பது ஆகிய அனைத்துமே கட்சியின் வழிபாட்டுக்குரிய தலைவரின் கண்ணசைவு அல்லது விரல் அசைவுக்கேற்பவே இருக்கின்றன.

வங்கதேசத்தில் காணப்பட்ட இதே நிலைமைதான் இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்திலும் நிலவியது. கொள்கைகள் – திட்டங்கள் அடிப்படையிலான இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் என்ற இடதுசாரி கட்சி, வலுவான தொண்டர் அமைப்பையும் கட்சிக் கிளைகளையும் கொண்டு மக்களின் நாடித்துடிப்பை நன்கு அறிந்த அரசியல் இயக்கமாகத் திகழ்ந்தது. பிறகு உடல் வலிமையைப் பிரதானமாக பயன்படுத்தும் அடியாட்களும், உள்ளூர் அளவில் பணம் சம்பாதிக்கும் நோக்கம் கொண்டவர்களும் கட்சியில் செல்வாக்குப் பெறத் தொடங்கினர்.

இதுவே கட்சியின் செல்வாக்கு இழப்புக்குக் காரணமானது. மார்க்சிஸ்டுகளைத் தீவிரமாக எதிர்த்த திரிணமூல் காங்கிரஸ் கட்சி, காங்கிரஸ் கட்சிக்கு மாற்றாகத்தான் தோன்றியது என்றாலும் அதிலும் இதே ஆதிக்க வர்க்கங்களும் பண

தொடர்ச்சி 7ம் பக்கம்...........


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சாவகச்சேரியில் மணல் கடத்திய ஐவர் கைது



யாழ்ப்பாணம், சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு மற்றும் சாவகச்சேரி பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற ஐந்து டிப்பர் வாகனங்களை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் ஐவரை கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது செவ்வாய்க்கிழமை மூன்று டிப்பர் வாகனங்களும் திங்கட்கிழமை இரண்டு டிப்பர் வாகனங்களும் கைப்பற்றப்பட்ட நிலையில் ஐந்து சந்தேக நபர்களும் கைதாகியுள்ளனர். அண்மைய நாள்களாக தென்மராட்சி பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற பல டிப்பர் வாகனங்கள் கைப்பற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# புத்தளத்தில் இரு பகுதிகளில் இரு யானைகள் உயிரிழப்பு

புத்தளத்தில் இரு வெளவேறு பகுதிகளில் இரு யானைகள் உயிரிழந்துள்ளதாக புத்தளம் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் எரந்த கமகே நேற்று (புதன்கிழமை) தெரிவித்தார்.

அதன்படி, புத்தளம், ஆனமடுவ பிரதேசத்தில் 30 வயதுடைய யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்த யானை துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்திருக்கலாம் என வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை, புத்தளம், வண்ணாத்தவில்லு பிரதேசத்தில் வீடொன்றிற்கு பின்புறத்தில் உள்ள காணியொன்றில் மின்சாரம் தாக்கி 30 வயதுடைய யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்த காணியின் உரிமையாளர் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக தனது காணியில் மின்சாரத்தை பொருத்தியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதற்கு முன்னரும் யானை ஒன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இந்த காணியின் உரிமையாளருக்கு எதிராக ஆனமடுவ நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஆனமடுவ பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# தெற்காசியாவில் ஜனநாயக அழுகல்!

5ம் பக்க தொடர்ச்சி...........

நோக்கம் கொண்ட இடைநிலை நிர்வாகிகளும் அதிகரித்துவிட்டனர்.

### ஏன்? ஏன்? ஏன்?

வலுவான கட்சி அமைப்பு, துடிப்பான தொண்டர் படை, மக்களுடைய நலன் அடிப்படையிலான கொள்கைகள் - திட்டங்கள் கொண்ட அரசியல் கட்சிகள் ஏன் மையத்தில் குவிக்கப்பட்ட அதிகாரமுள்ள நிர்வாக முறை, மக்களிடையே செல்வாக்கு பெற்ற தலைவரை வழிபாட்டுக்குரியவராகவே துதிக்கும் நிலைக்கு மாறின?

மக்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்யும் ஆற்றல் அற்ற மாநில அரசு நிர்வாகங்களும், பொருளாதாரக் கட்டமைப்பில் நவபொருளாதாரக் கொள்கைக்கு மாறும் நிலைமையும்தான் அரசியல் கட்சிகளின் செயல்பாட்டிலும் மாற்றங்களை நிகழ்த்தியுள்ளன. வங்கதேசத்தில் கட்டுப்பாடுகளற்ற பொருளாதாரச் சந்தை கொள்கையை முதலில் ராணுவம் தலைமையிலான சர்வாதிகார அரசுதான் கொண்டுவந்தது. பிறகு எல்லா அரசியல் கட்சிகளுமே அதை ஏற்றுக்கொண்டுவிட்டன.

முன்னதாக சுகாதாரம், கல்வி, தொழில் திட்டமிடல், பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்குவது ஆகியவற்றை அரசுதான் செய்துவந்தது அவையெல்லாம் இப்போது தனியார் துறையிடமும் உலக அளவில் செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமும் விடப்பட்டுள்ளன. வங்கதேசத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சில துறைகளில் மட்டுமே ஓரளவுக்கு வெற்றிபெற்றுள்ளன. ஆனால் இந்த வெற்றிகள், அரசின் நிர்வாக அமைப்பை மேலும் வலிமையற்றதாக்கிவிட்டது.

### அரசு இயந்திரம் முக்கியம்

அரசியல் கட்சிகளின் வலிமையைவிட அரசுகளின் நிர்வாக இயந்திரங்கள் வலிமையாக இருப்பது அவசியம். நீண்ட கால நலனைக் கருத்தில் கொண்டு பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டுவதும் அவற்றை வெவ்வேறு துறைகளின் ஒத்துழைப்போடு நிறைவேற்றுவதும்தான் தெற்காசிய நாடுகளின்



அடிப்படை கட்டமைப்பையே வளர்ந்த நாடுகளாக்க உதவும். தென்கிழக்கு ஆசிய நாடுகளும் கிழக்கு ஆசிய நாடுகளான கொரியா, ஜப்பான், தைவான் போல முன்னேற அரசு இயந்திரம் வலிமையானதாகவும் நவீனமானதாகவும் இருக்க வேண்டும்.

தெற்காசிய நாடுகளின் அரசுகள் நிர்வாக தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்றவை, அவற்றால் பேரியல் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பராமரிக்க முடியும். ஆனால் அனைவருக்கும் கல்வி, படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு, பெருகிவரும் நடுத்தர வர்க்கத்தின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்வது, கல்வி- சுகாதாரம் ஆகிய அடிப்டைத் தேவைகளை அனைவருக்கும் நிறைவாக அளிப்பது ஆகியவற்றைச் செய்துதர முடியாது.

எனவே, மத- இன அடிப்படையிலான அரசியல் வேறுபாடுகளை முதன்மைப்படுத்தி ஆதரவாளர்களை ஈர்க்கவும் அடிப்படையை வலுப்படுத்தவும் அரசியல் கட்சிகள் முற்படுவதால் அரசியல் கட்சிகளுக்குள்ளேயே ஜனநாயகத்தன்மை, தலைமையைத் துதிப்பதாக மாறிவிடுகிறது.

இதனால் அரசியல் கலாச்சாரமே தேசியவாத, மதவாத எண்ணங்களின் அடிப்படையில் வலுவடைகிறது. சிறுபான்மையினர் குறி வைக்கப்படுகின்றனர். வங்கதேசத்திலேயே கடந்த சில வாரங்களாக சிறுபான்மை இந்துக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துவருவது இதையே காட்டுகிறது. அவர்கள் பலிகடாக்களாக ஆக்கப்படுகின்றனர்.

© டெலிகிராப்




## பொதுவேட்பாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாணக்கியனும் வந்திருந்தார். இவர்கள் அனைவருமே 13 ஆவது திருத்தச் சட்டத்தையே வலியுறுத்தி இருந்தார்கள்.

பொது வேட்பாளரை நிறுத்தி சர்வதேச சமூகத்திற்கு தமிழர்களுடைய அபிலாசைகளை கூறப்போகின்றோம் என்றவர்கள், இந்தியா எங்களை தேடிவந்தபோது கூட்டாக வலியுறுத்தியது 13ஆம் திருத்தச் சட்டத்தைதான். இவர்கள் நிறுத்தி இருக்கின்ற பொது வேட்பாளர், தமிழ் மக்கள் ஒற்றை ஆட்சிக்குள் 13ஆவது திருத்தச்சட்டத்தை ஏற்றுக்கொண்டு இதனை ஒரு பௌத்த சிங்கள நாடு என்பதனை ஏற்றுக் கொள்ள தயார் என்பதையே எடுத்துக்காட்டுகிறது. அத்தகைய வேட்பாளருக்கு தமிழ் மக்கள் வாக்களித்து இருக்கின்றார்கள் என்பதனை உலகிற்கு கூறுவதற்குத்தான் முயல்கின்றார்கள்.

இன்றிருக்கும்அரசியல்சூழலில் பிரதான வேட்பாளர்களிடமிருந்து சலுகைகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றது என்பதையும்நீங்கள் கவனத்தில்கொள்ளவேண்டும். உங்களுக்குத் தெரியும், காலம் காலமாக எச்சில் இலைக்காக அலைந்துகொண்டிருக்கின்றவர்களே இந்தப் பொது வேட்பாளரை நிறுத்தி இருக்கின்ற தரப்புகள். இந்தியாவினுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காக, இலங்கை அரசனுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே அவர்கள் செயற்படுகிறார்கள். தமிழர்கள் இந்தத்தேர்தலைப்புறக்கணிப்பதன் மூலம் இலங்கையர் என்கின்ற அடையாளத்தை புறக்கணித்து, பேரம் பேசும் சக்தியாக உருவெடுப்பதை தடுப்பதற்காக தமிழ்மக்களைத்தோற்கடிப்பதற்காக இவர்கள் இந்தப் பணியைப் பொறுப்பெடுத்து இருக்கிறார்கள்.

இவர்களுக்குக்கிடைக்கக்கூடிய அற்ப சொற்ப சலுகைகளுக்காக பேராசிரியர் கணேசலிங்கம் அரசியல் பத்தி எழுத்தாளர் நிலாந்தன், ஜோதிலிங்கம் போன்றவர்களும் இந்த கட்சிகளும் கூட்டணித்து மிகப்பெரும் சதியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களுடைய இந்த சதி செயல்களுக்குள் எமது மக்கள் அகப்பட்டு விடக்கூடாது ஒட்டுமொத்தமாக ஒற்றுமையாக இந்த தேர்தலை மக்கள் புறக்கணிக்க வேண்டும் என கேட்கின்றோம்.

2019 இல் கோட்டபாய ராஜபக்சே போட்டியிட்டபோது அவர் பெரும்பான்மையால் வெற்றி பெறுவார் என்பது நன்றாக தெரிந்திருந்த நிலைமையிலும் கூட அன்றும் நாங்கள் இதை தேர்தலை பகீஸ்கரிக்க கூறிய போது இல்லை கோட்டாவை தோற்கடிப்பதற்கு சஜித்திற்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறி சொன்னார்கள். சஜித் பிரேமதாச ஒருபோதும் வெல்ல மாட்டார் என்பதும் கோட்டபாய ராஜபக்ச அறுதிப் பெரும்பான்மையால் வெல்வார் என்பதும் தெரிந்திருந்தும்கூட அவர்கள்தமிழர்களைவாக்களிக்கக் கோரியது கோட்டாவை தோற்கடிப்பதற்காக அல்ல மாறாக தமிழர்கள் பரிஷ்கரிப்பு என்கின்ற ஆயுதத்தை கையில் எடுத்து ஒரு பேரம் பேசும் சக்தியாக உருவெடுத்துவிடக்கூடாது என்பதற்காகத்தான்.

தமிழர்களைத் தோற்கடிக்க வேண்டும் இந்தியாவினுடைய எடுபிடிகளாகதமிழர்கள்எப்பொழுதும் அவர்களுடைய காலிலே கிடக்க வேண்டும் என்பதற்காக இந்திய கூலிகளானதமிழ்அரசுக்கட்சிசார்ந்த இந்த தேச துரோகிகள் அன்றே சஜித் பிரேமதாசாவிற்கு வாக்களிக்குமாறு கேட்டு இருந்தார்கள்.

இந்த அரியனேந்திரன், சுமந்திரன், ஸ்ரீதரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், விக்னேஸ்வரன் சகலருமே போர்க்குற்றங்களுக்கு உள்ளக விசாரணையை வலியுறுத்தியவர்கள். கோட்டபாயராஜபக்சவை பாதுகாத்தவர்கள் இவர்கள்தான் இன்று நாமல் ராஜபக்சவுக்கு தமிழர்களுக்கு உரிமை கொடுக்க மாட்டேன் அதிகாரங்களை கொடுக்க மாட்டேன் வடகிழக்கை இணைக்க மாட்டேன் என்று சொல்லி கூறுவதற்கான துணிச்சல் வந்திருக்கின்றது.

அவருக்கு கிடைக்கும் எலும்பு துண்டுக்குவாலாட்டிகொண்டுஇந்தப் பொது வேட்பாளர் இன்று வந்திருக்கிறார். இது தேசிய தலைவருக்குச் செய்கின்ற துரோகம். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து உரிமைக்காகஉயிர்கொடுத்தஐம்பதாயிரம் மாவீரர்களுக்கு செய்கின்றச் துரோகம். இந்த விடுதலைப் போராட்டத்தைஆதரித்துஇந்தமண்ணில் வாழ்ந்து உயிர் கொடுத்த, பேரினவாதத்தால் படுகொலை செய்யப்பட்ட கிட்டத்தட்ட 3 லட்சத்துக்கும்அதிகமானமக்களுக்கு செய்கின்றதுரோகம். இதனைமக்கள் தெளிவாகபுரிந்துகொள்ளவேண்டும்.

இந்தமக்களுக்காகநேர்மையாக முதுகெலும்பை நிவர்த்தி கொண்டு பேரம் பேசுகின்ற துணிச்சலும் ஆற்றலும்உள்ளஒரேஒருதலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவரை நீங்கள் பின்பற்றுங்கள் அவருடைய வேண்டுகோளின் படி இந்த தேர்தலை புறக்கணிக்க வேண்டும்கு என தெரிவித்தார்.

## படையினருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றார் அவர்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இந்த நாட்டின் அரசியல் வரைபடத்தை மாற்றியமைத்தது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்தியபொருளாதார திட்டங்களை முன்னெடுத்து குறுகிய காலத்தில்

நாட்டை பல்வேறு துறைகளில் முன்னேற்றினார். 2015ஆம் ஆண்டு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த நாட்டை கையளித்தோம். 2019 ஆம் ஆண்டு பொருளாதார மட்டத்தில் பாதிக்கப்பட்டிருந்த நாட்டையே கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பேற்றார். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் கொவிட் பெருந்தொற்றுத் தாக்கத்துக்கும் முகங்கொடுக்க நேரிட்டது. பொருளாதாரமா அல்லது மக்களின் உயிரா என்ற தீர்மானமிக்க கேள்வி எழுந்தபோதுமக்களின்உயிரையே பாதுகாத்தோம்.

பொருளாதாரப் பாதிப்பை முன்னிலைப்படுத்தி ஒரு தரப்பினர் எமது அரசை வீழ்த்தினார்கள். அரசு வீழ்ச்சியடைந்தாலும் நாட்டை வீழ்ச்சியடைய செய்யவில்லை. இவ்வாறான நிலையில் ரணில் விக்கிரமசிங்கவிடம் அரசைக் கையளித்து நிலைமைகளைச் சீர்செய்வதற்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கினோம்.

நாட்டின் தேசியத்துக்கும், இராணுவத்தினருக்கும் எதிரான தீர்மானங்களை ஒருபோதும் எடுக்க முடியாது. சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடவும், குறுகிய நோக்கங்களுக்காக செயற்படவும் நாங்கள்தயாராகவில்லைஎன்பதால் தனித்துத் தீர்மானங்களை எடுத்துள்ளோம்.சவால்களைக்கண்டு நாங்கள் அச்சமடையவில்லை. சவால்களைநான்விரும்புகின்றேன். எவர் மீதும் சேறு பூசவில்லை. கொள்கைகளைமுன்னிலைப்படுத்தி செயற்படுகின்றோம்.

தேசிய உற்பத்திகளை நிச்சயம் மேம்படுத்துவோம். விவசாயத்துறையில் இருந்து எமது தேசிய உற்பத்தி எழுச்சியை முன்னெடுப்போம். விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். கடன் பெற்று உணவு வழங்குவது சிறந்தபொருளாதாரகொள்கையல்ல, விவசாயிகளின் பொருளாதாரத்தை பலப்படுத்துவோம்.

இலங்கை ஒற்றையாட்சி நாடு. நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாக்கவே படை வீரர்கள் போரிட்டார்கள். நாங்கள் அரசியலில் இருக்கும் வரை இந்த நாட்டில் எல்லைக் கிராமங்கள்தோற்றம் பெறுவதற்கு இடமளிக்கப்போவதில்லை. இந்தப் பௌத்த நாட்டில் அனைத்து மதங்களுக்கும் முன்னுரிமை மற்றும் கௌரவமளிக்கத் தயார். அதனைச் செய்வோம்.

அதேபோல் மாகாண சபைக்குள் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை ஒருபோதும் வழங்கமாட்டோம். தேர்தல்காலத்தில் வடக்கில் உள்ளவர்களை ஏமாற்ற வேண்டிய தேவை கிடையாது. முடிந்ததை முடியும் என்பேன், முடியாததை முடியாது என்பேன்.

தமிழர்களின் கலாசாரத்தைப் பாதுகாப்பேன். மொழி உரிமையையும் வழங்குவோம். ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீளிணைத்து காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தை ஒருபோதும் வழங்கமாட்டோம் -- என்றார்.

## ரூ. 7.9....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையைச் சபையில் முன்வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச வருவாயை ஈட்டிக் கொள்வதற்கு பல யோசனைகளை முன்வைத்துள்ளோம். உள்நாட்டு இறைவரித்திணைக்களம், மதுவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகிய மூன்று அரச நிறுவனங்கள் கடந்த ஆறு மாத காலப்பகுதிக்குள் மாத்திரம் 1680.4 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளன.

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில்வரிவிலக்களித்ததால் 978பில்லியன்ரூபாஇழக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டது.வரி செலுத்தாதவர்களின் 900 வங்கிகணக்குகளை முடக்குவதற்குஆலோசனைவழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 18 வயதுக்கு மேற்பட்ட 17 மில்லியன் பேருக்கு வரி செலுத்துவோர் அடையாள எண் (டின் இலக்கம்) வழங்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க பரிந்துரைத்தோம்.இதற்கமைய 5 மில்லியன் பேருக்கு டின் இலக்கம் வழங்கப்பட்டுள்ளது.

தங்கம் இறக்குமதியாளர்களிடமிருந்து வரி அறவிடல் குறித்து சிக்கல் காணப்படுகிறது.இதற்கான ஆலோசனைகளைகுழுவின்ஊடாக வழங்கியிருந்தோம்.இதற்கமைய பிரதானதங்கஇறக்குமதியாளர்களில் 17 பேரில் 6 பேர் வரி செலுத்தியுள்ளனர்.அத்துடன் தண்டப்பணம் அறவிடல் கூடாக மாத்திரம் சுங்கத் திணைக்களம் இந்த ஆண்டு மாத்திரம் 10 பில்லியன் ரூபாவை மேலதிகமாக திரட்டியுள்ளது.

மதுவரி திணைக்களம் அறவிட வேண்டிய 7.9 பில்லியன் ரூபா வரி இன்றும் நிலுவையில் உள்ளது. வரி செலுத்தாத பிரதான மதுபான உற்பத்திநிறுவனங்களின் அனுமதி பத்திரத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மதுவரி திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கினோம்.

அனுமதி பத்திரத்தை இடைநிறுத்துவது குறித்து நிதியமைச்சு உரிய ஆலோசனைகளை வழங்காத காரணத்தால் உரிய தீர்மானத்தை எடுக்க முடியவில்லை என்று மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.ஆகவேவரிசெலுத்த வேண்டிய தரப்பினரிடமிருந்து முறையாக வரிகளை அறவிட்டால் மக்கள்மீதுவரிசுமைகளைதிணிக்க வேண்டியதில்லை என்றார்.



## பஸ் – சைக்கிள் மோதி விபத்து ஒருவர் இறப்பு



பாணந்துறை நகரத்தில் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று துவிச்சக்கர வண்டி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, துவிச்சக்கர வண்டியை செலுத்திச் சென்றவர் படுகாயமடைந்துள்ள நிலையில் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

பாணந்துறை, பின்வத்தை பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே உயிரிழந்துள்ளார்.(05)

## 4 சொகுசு மினி பஸ்கள் புத்தளத்தில் தீக்கிரை







புத்தளம், வென்னப்புவ பிரதேசத்தில் உள்ள வாகனம் பழுதுபார்க்கும் இடத்தில் தரித்து நின்ற நான்கு சொகுசு பஸ்கள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

தீ வைத்து எரிக்கப்பட்ட நான்கு சொகுசு பஸ்களில் ஒன்று முழுவதுமாக சேதமடைந்துள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திலிருந்த சி.சி.ரிவி கமராவை சோதனையிட்டு பார்த்த போது, இனந்தெரியாத நபரொருவரால் இந்த நான்கு சொகுசு பஸ்களும் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

இதனால், சுமார் 3 கோடி ரூபா அளவில் நட்டம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)




காலைக்கதிர் Kalaikkathir

# துண்டாடப்பட்ட கைகளைப் பொருத்தி யாழ். போதனா வைத்தியசாலை சாதிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரண்டு துண்டுகளாகத்துண்டிக்கப்பட்டகைசத்திரசிகிச்சையின் பின்னர் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளது.

குறித்த தகவலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தனது சமூகவலைத்தளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

சம்பவம்தொடர்பாகமேலும்தெரியவருவதாவது-

யாழ்.போதனா வைத்தியசாலையில்கடந்த மாதம் கை துண்டிக்கப்பட்ட நிலையில் இளைஞன் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே, நீண்ட மணிநேர சத்திர சிகிச்சையின் பின்னர் வெற்றிகரமாக மீண்டும் கை பொருத்தப்பட்டு இளைஞன் வீடு திரும்பியுள்ளார்.

குறிப்பிட்ட சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்ட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வைத்தியசாலை சமூகம் சார்ந்த நன்றி என வைத்தியசாலைப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.(05)

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட கான்ஸ்டபிள் கைது

வெளிநாட்டில் உள்ள பெண் ஒருவருக்கு சொந்தமான ஐஸ் போதைப் பொருளை விற்பனை செய்ததாக கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியாபொலிஸாருக்குகிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியாபொலிஸ்நிலையத்தில் கடமையாற்றும்பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 2,590 மில்லி கிராம் (13 பொதிகள்) ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ் டபிளை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என நுவரெலியா பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.(05)

# 12 வயது மாணவன் திடீரென வைத்தியசாலையில் சேர்ப்பு

## ஐஸ் போதைப் பொருள் பாவனையே காரணமாம்

வவுனியா நகரையண்டிய பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 12 வயது மாணவன் ஒருவன் ஐஸ் போதைப் பொருள் பாவித்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவரது உடல் நிலை தேறி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியாநகரையண்டியபிரபலபாடசாலையில் தரம் 7 இல் கல்வி பயிலும் 12 வயது மாணவன் ஒருவன் பாடசாலைக்கு முன்பாகவுள்ள கடை ஒன்றின் அருகிலிருந்த ஒதுக்கு புறமான இடம் ஒன்றிற்குச்சென்றுவிட்டு மீண்டும் பாடசாலைக்குள் சென்றுள்ளார்.

சிறிதுநேரத்தில்குறித்தமாணவன்தொடர்ச்சியாக வாந்திஎடுத்தமையால்பெற்றோருக்குதெரியப்படுத்தி அவர்கள் ஊடாக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில்சேர்க்கப்பட்டமாணவன்தற்போது நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த மாணவன் ஐஸ் போதைப்பொருளைப்பாவித்ததன் காரணமாக இவ் அசம்பாவிதம்ஏற்பட்டதாகபொலிஸார்தெரிவித்தனர். அத்துடன் குறித்த மாணவன் இந்து மதகுரு ஒருவரின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# ஆண் ஒருவரின் சடலம் கிண்ணியாவில் மீட்பு

கிண்ணியாபொலிஸ்பிரிவுக்குட்பட்ட ஆலங்கேணி பாலத்துக்கு அருகிலுள்ள ஆற்றில்ஆணொருவரின்சடலமொன்று செவ்வாய்க்கிழமைமாலைமீட்கப்பட்டுள் ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் மஹ்ரூப் நகர் பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய ஆண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கிண்ணியா - ஆலங்கேணி பாலத்திற்கு அருகில் ஆற்றில் மிதந்து கொண்டிருந்த நிலையில் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும் இந்த சடலத்தின் நெற்றியில் காயம் காணப்பட்டதாகவும் திடீர் மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார். உயிரிழந்தவர் ஐந்து பிள்ளைகளின்தந்தைஎனவிசாரணை களில் தெரியவந் துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## சிந்துஜாவின் உயிரிழப்பின் எதிரொலி:

# மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் பல்வேறு தீர்மானங்கள் முன்னெடுப்பு



மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் செவ்வாய்க்கிழமை மாலை அவசர கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்டச் செயலர் க.கணகேஸ்வரன், மேலதிகச் செயலர், பிரதேச செயலாளர், உதவி மாவட்ட செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியசாலை பணிப்பாளர், அருட்தந்தையர்கள், வைத்திய நிபுணர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் எதிர்கால நகர்வு தொடர்பாகவும் மக்கள் அச்சமின்றி வைத்தியசாலைக்குவரும்சூழலைஏற்படுத்தி முன்னோக்கி நகர்வோம் என்னும் நோக்கு நிலையில் பல விடயங்கள் அறிவு பூர்வமாக ஆராயப்பட்டன.

இதன் போது சில விடயங்களுக்கு தீர்வு கோரி ஜனாதிபதிக்கு கடிதம் எழுதுவதாக அரசாங்க அதிபர் கூறினார்.

மேலும் இன்முகத்தோடு நோயாளரை அணுகும் முறைமை தொடர்பில் பயிற்சி வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சிந்துஜாவின் துன்பியல் சம்பவம் போன்று இனி நிகழக் கூடாது என்று வலியுறுத்தப்பட்டது.(05)

# மாமியார் தாக்கப்பட்டுக் கொலை மனைவியையும் அடித்த நபர் கைது

மாமியாரை தாக்கி கொலைசெய்து மனைவி மற்றும் மகளை கடுமையாக தாக்கி காயப்படுத்திய நபரொருவர் கலபிடமட லெவன்கம பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலபிடமட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லெவன்கமபகுதியில்செவ்வாய்க்கிழமை சந்தேக நபர், மாமியாரைத் தாக்கி கொலை செய்துள்ளதோடு, மனைவி மற்றும் மகளை கூரிய ஆயுதத்தால் தாக்கிகாயப்படுத்தியுள்ளதாகபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் பணத் தகராறு காரணமாக மாமியாரின் தலையில் கல்லால் தாக்கியுள்ளார். இதன்போது, தலையில்பலத்தகாயமடைந்தமாமியார் கரவனெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபின்னர்உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அதலவத்த, லெவன் கம பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவராவார்.

சம்பவம் தொடர்பில் 44 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளதுடன், கலபிடமட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுவருவதாகதெரிவித்துள்ளனர். (05)

# ஒரு கிலோ கஞ்சாவுடன் கிராண்ட்பாஸில் கைது

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கொழும்பு 14 பிரதேசத்தில் ஒரு கிலோ கிராம் கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை யினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(05)

# பொலிஸ் பரிசோதகர், கான்ஸ்டபிள் ஹெரோயினுடன் கொழும்பில் கைது

ஒருகிலோகிராம்ஹெரோயின்போதைப்பொருளை வைத்திருந்த பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் பிலியந்தலையில் உள்ள வணிக வளாகம் ஒன்றின் தரிப்பிடத்திலிருந்து காரில் வந்துகொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மொரட்டுவை விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

35 வயதான பொலிஸ் பரிசோதகர் போதைப்பொருள்கடத்தலுக்குஉதவியகுற்றச்சாட்டின்பேரில்கைது செய்யப்பட்டுள்ளதோடு, கான்ஸ்டபிள் ஹெரோயின் வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார். (05)

# பதுளையில் லொறி வீதியில் கவிழ்ந்தது

## மூவர் பலத்த காயம்



பதுளை தென்னேபங்குவ பிரதான வீதியில் வெந்தேசி வத்தை பகுதியில் லொறி ஒன்று வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் பலத்த காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விபத்துக்குள்ளான லொறியில்பயணித்தமூவரும்கந்தகெட்டிய 21 ஆம் கட்டையை சேர்ந்த நபர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த லொறியின் வேகத்தை சாரதியால் கட்டுப்படுத்த முடியாமையே விபத்துக்கான காரணம் என பதுளை தலைமையக பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் தெரிவித்தனர்.

காயமடைந்த மூவரும் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் மேலதிக விசாரணைகளை பதுளை தலைமையக போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஆறு மாதங்களாகக் காணாமல் போன பெண் சடலமாக நுவரெலியாவில் மீட்பு



நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குராங்கெத்த கோனப்பிட்டிய சீனாக்கொலை தோட்டத்தில் கொன்று புதைக்கப்பட்ட நிலை பெண் ஒருவரின் சடலம் புதன்கிழமை தோண்டி எடுக்கப்பட்டது.

36 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயான சிவலிங்கம் தர்ஷனி என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார்.

இவர் அக்ரபத்தனை பகுதியில் அரச வைத்தியசாலையில் தாதியராக பணிபுரிந்து வந்த நிலையில் இடமாற்றம் காரணமாக கோனப்பிட்டிய பிரதேச வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தாதியாக சேவையாற்றிய நிலையில் கடந்த ஆறு மாதங்களாக காணாமல் போயுள்ளதாக அவரது கணவரால் ஆறு மாதங்களுக்கு முன்னர் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.



குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை நுவரெலியா பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரால் பிரதேச குற்றப் புலனாய்வுப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இவர்களது விசாரணைகளின் மூலம் கண்டி பிரதேசத்தில் வசிக்கும் சந்தேகத்திற்கிடமான நபர் ஒருவரைக் கைதுசெய்ததுடன், மேலதிக விசாரணைகளின் போது சந்தேகநபர் வாக்குமூலத்துக்கு அமைய பெண்ணை கழுத்தை நெரித்து கொன்று புதைத்துள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும் சந்தேகநபரிடம் இருந்து அவர் அணிந்திருந்த தங்க ஆபரணங்கள் பன்வில பகுதியிலுள்ள வங்கி ஒன்றில் அடகு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்ததையடுத்து குறித்த ஆபரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதன்படி புதன்கிழமை வலப்பனை நீதிவான் சியபத் விக்கிரமசிங்க முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. சம்பவம் தொடர்பில் மந்தாரநுவர பிரதேசத்தை சேர்ந்த மேலும் ஒரு சந்தேகநபரை கைதுசெய்ய உள்ளதாகவும் அவர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சந்தேகநபர் வலப்பனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள்

# இரு சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் காதலனும், காதலனின் நண்பனும் கைது

அநுராதபுரம், மிகிந்தலை பஸ் தரிப்பிடத்தில் நின்று கொண்டிருந்த இரு சிறுமிகளை ஏமாற்றி வீடொன்றிற்கு அழைத்துச் சென்ற பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் காதலனும் காதலனின் நண்பனும் கைது செய்யப்பட்டுள்ளனர் என மிகிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

கஹடகஸ்திகிலிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 8 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் இரு சிறுமிகளே பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளனர். 27 மற்றும் 30 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

இந்த இரு சிறுமிகளும் பாடசாலைக்குச் செல்வதாகக் கூறி வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் பாடசாலைக்கு செல்லாமல் உடைகளை மாற்றி வேறு பிரதேசத்திற்குச் சென்று மீண்டும் வீடு திரும்புவதற்காக மிகிந்தலை பஸ் தரிப்பிடத்தில் நின்று கொண்டிருந்துள்ளனர்.

இதன்போது, இந்த சிறுமிகளில் ஒருவரது காதலனான சந்தேக நபர் வானொன்றில் பஸ் தரிப்பிடத்திற்கு சென்று இரு சிறுமிகளையும் ஏமாற்றி தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இதன்போது, அந்த வீட்டிலிருந்தவர்கள் சிறுமிகளை வீட்டில் தங்க வைக்க அனுமதி வழங்க மறுத்துள்ளனர்.

பின்னர், சந்தேக நபரான காதலன் இந்த சிறுமிகளை ஹோட்டல் ஒன்றிற்கு அழைத்துச்சென்று அவர்களுடன் இரண்டு நாட்கள் தங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், அந்த ஹோட்டலுக்குச் சென்ற காதலனின் நண்பன் சந்தேக நபரான காதலனுடன் இணைந்து இந்த இரு சிறுமிகளையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிகிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பெரஹராவை ட்ரோன் மூலம் படம் பிடித்த திருமண புகைப்படப்பிடிப்பாளர் கைது

கண்டி வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகையின் வருடாந்த எசல பெரஹராவின் இறுதி பெரஹரா ரந்தோலி பெரஹராவில் ட்ரோன் கமராவை பயன்படுத்தி புகைப்படம் எடுத்த திருமண புகைப்படப்பிடிப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலதா மாளிகை வளாகத்தில் ட்ரோன் கமரா பறப்பதை அவதானித்த விமானப்படை வீரர்கள் அதனை சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

பின்னர் ட்ரோன் கமராவை பயன்படுத்திய சந்தேக நபர் தலதா மாளிகைக்கு அருகிலுள்ள ஹோட்டலில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள தலதா மாளிகையில் அனுமதியின்றி ட்ரோன் கமராக்களை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

ரந்தோலி பெரஹெராவின் மூன்றாவது நாளில் ட்ரோன் கமராவை பயன்படுத்திய மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். (05)

# தெற்கு அதிவேக வீதியில் விபத்து

## மூவர் காயம்

தெற்கு அதிவேக வீதியில் பத்தேகம பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று (புதன்கிழமை) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு நோக்கிப் பயணித்த காரின் சாரதி தூக்கக்கலக்கத்தால் வீதியின் அருகிலிருந்த பாதுபாப்பு வேலியில் மோதி நின்ற நிலையில், பின்னால் வந்த பஸ் குறித்த காருடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, காரில் பயணித்த மூவர் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (05)

# வவுனியாவில் வாகன விபத்து

## ஒருவர் படுகாயம்



வவுனியா விளக்கு வைத்த குளம் ஏ-9 வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் நேற்று (புதன்கிழமை) மாலை படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

ஹையேஸ் ரக வாகனமும், ஓட்டோவும் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி மீது, அதே திசையில் பயணித்த ஹையேஸ் மோதியே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது ஓட்டோவின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சிலாபம் கடற்கரையில் ஆணின் சடலம் மீட்பு

புத்தளம், சிலாபம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடற்கரை பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லையெனவும் 45 முதல் 50 வயது மதிக்கத்தக்கவர் எனவும் 05 அடி 08 அங்குலம் உயரமுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவரது இடது மார்பகத்தில் 'அம்மா' எனவும் வலது மார்பகத்தில் 'வினித்தி' எனவும் பச்சை குத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலாபம் வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த சிலாபம் பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஊடகவியலாளர் நிலோஜாவுக்கு விருது வழங்கி கௌரவமளிப்பு



(அபு அலா)

ஒருங்கிணைந்த தமிழர் பேரவை மற்றும் வெளிநாட்டில் வாழும் தமிழர் நலன்புரிச்சங்கம் இணைந்து நடத்திய கத்தார் தமிழன் விருது 2024 வழங்கும் விழாவில் இலங்கை - அம்பாறை மாவட்ட மீனோடைக்கட்டைச் சேர்ந்த நியாஸ்தீன் பாத்திமா நிலோஜா என்ற இளம் ஊடக செயற்பாட்டாளருக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த தமிழர் பேரவை மற்றும் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நலபுரிச்சங்கம் இணைந்து வழங்கிய கத்தார் தமிழன் விருது விழா கடந்த சனிக்கிழமை துமாமா ஜசிபிஎவ் காஞ்சனா மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்த சித்ரா சீதாராமன், இலங்கை - மீனோடைக்கட்டைச் சேர்ந்த இளம் ஊடக செயற்பாட்டாளரான நியாஸ்தீன் பாத்திமா நிலோஜாவுக்கு விருதை வழங்கி பொன்னாடையும் போர்த்தி கௌரவித்தார்.

இவ்விழாவில் கத்தாரில் நாட்டின் முக்கிய பிரமுகர்கள், தொழிலதிபர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சியிலும் ரணிலுக்கு ஆதரவு பிரசாரத்தை ஆரம்பித்தார் விஜயகலா







முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதான அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சிக்கான தேர்தல் பிரசாரத்தை நேற்று ஆரம்பித்தார்.

முருகண்டிபிள்ளையார்ஆலயத்தில்விசேட வழிபாட்டை தொடர்ந்து. தனது பிரச்சாரத்தை ஆரம்பித்தார் வர்த்தக நிலையங்கள் மற்றும் கிளிநொச்சிபொதுச்சந்தைஉள்ளிட்டபகுதிகளில் துண்டுப்பிரசுரங்களை வழங்கியிருந்தார்.

கடந்த காலங்களில் நாங்கள் பட்ட துன்பங்கிலிருந்து நாட்டை மீட்டெடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க.

வடக்குமாகாணத்தைஎடுத்துக்கொண்டால் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளோம். பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் தாய் தந்தையை இழந்த பலர் உள்ளனர். செல் துகழ்களை பலர் சுமந்துள்ளனர்.

வரிசையில்பலநாள்களாககாத்திருந்தோம்

பொருளாதாரத்தைமீட்டெடுக்கஆசியாவின் சிறந்த தலைவர்

அரகல போராட்டத்தின் பின்பு நாட்டை மீட்குமாறு கோரியும் எந்தவொரு தலைவரும் பொறுப்பேற்கவில்லை துணிந்து மக்கள் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் நிராகரித்த வேளையிலும் தேசியப்பட்டியலில் நாடாளுமன்றம் சென்று நாட்டை மீட்டெடுத்த உலகத்தின்தலைசிறந்ததலைவர். இப்படியான தலைவர்கள் இனி வரமாட்டார்கள்.

அமெரிக்க தூதுவர் கூறியிருக்கின்றார் ஆசியாவின் மிச்சிறந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்க

2005 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் வாக்குகளை அளித்திருந்தால் உயிர் இழப்புக்கள் ஏற்பட்டிருக்காது அனைவரும் ஒன்று சேர்ந்து வாக்களிக்க வேண்டும்

பங்களாதேஸ்பிரதமவிரட்டியடிக்கப்பட்டது போலஎமதுநாட்டிலும்விரட்டியடிக்கப்பட்டபோது பொறுப்பெடுத்தவர்.தலதா அத்துக்கோரல தெளிவாக கூறியிருக்கின்றார்.சஜீத் பயம் காரணமாக நாட்டை பொறுப்பேற்கவில்லை என்று. - உள்ளது. (05-113)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.08.2024இல் வெளியிடப்பெற்றது